சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.225/2025

2026ம் ஆண்டு ஜுலை மாதம் 20ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திரு. மணிகண்டன்<br>த/பெ. முத்துகுமாரசாமி | நாள் 20.07.2026 |
| வயது. | வட்டம் |
| கிராமம். | மாவட்டம். |

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்**

1. நான் வழக்கில் வாதி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். 20.10.2023 தேதியில் பிரதிவாதி எனக்கு எழுதி கொடுத்த கடனுறுதி சீட்டு அசல் **வா.த.சா.ஆ.1.** 26.09.2025 தேதியில் பிரதிவாதிக்கு நான் அனுப்பிய வழக்கறிவிப்பின் அலுவலக நகல் **வா.த.சா.ஆ.2.** பிரதிவாதி அதனை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை **வா.த.சா.ஆ.3.** தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை –** இல்லை, தோன்றாத் தரப்பினர்